# ஜநவிநோதிநி.

இல. 8.] ஆகஸ்டு௴ 1877. [புஸ்த. VIII.

## லார்ட் லிட்டன்.

இப்போது நமது சென்னைநகரில் விஜயஞ்செய்திருக்கும் இத்தேசத்து கவர்னர் ஜெனராலாகிய லார்ட் லிட்டன் பிரபு அவர்கள், 1831-௵ நவம்பர்௴ 8௳ பிறந்தவர். இவர் இக்காலத்துக் கவிகளிலொருவர்; பிறராஜாக்களுடைய சபைகளிற்சென்று ஸ்தானாதிபத்தியஞ்செய்வதில் மிகத் திறமையுள்ளவர். இவர் தந்தையோ பலவிதப் புதுக்கதைகளும், செய்யுள்களும், நாடகங்களும் இயற்றிச் சபைகளில் பிரஸங்கஞ்செய்து, பார்லிமெண்டு என்னும் ஜனப்பிரதிநிதிச் சங்கத்தில் ஒருவராய்ப் புகழ்பெற்றிருந்தார். அவர்க்கு இவர் ஒரே குமாரர். இந்த லிட்டன் பிரபு முதலில் ஜர்மனிதேசத்திலுள்ள ஹானவர் நகரத்திலும், பிறகு பான் நகரத்திலும் கல்வி கற்றுப் பல தேசபாஷைகளிலும் பயின்றார். அப்படிக் கல்விப் பயிற்சிசெய்யுங்காலங்களில் பல நூதன பாஷைகளைக் கற்பதிலேயே இவர்க்கு நோக்கம் அதிகமாயிருந்தது.

மாட்சிதங்கிய லார்ட் லிட்டன் பிரபுஅவர்கள் ஏறக்குறைய 18 வயதில் ஸ்தானாதிபத்திய சம்பந்தமாய்ச் சம்பளமில்லாமல் ராஜாங்க உத்தியோகத்தில் பிரவேசித்தார். முதலில் சிறிதுகாலம் அமெரிக்காகண்டத்தில் வாஷிங்டன் நகரத்தில் ஸ்தானாதிபதிகளாயிருந்தவர்களிடத்தில் லிகிதராயிருந்து, பிறகு ப்ளாரென்ஸ் நகரத்தில் சிலகாலம் ஸ்தானாதிபதி வேலைபார்த்து, பின்பு அதே உத்தியோகமாய்ப் பாரிஸ் பட்டணத்திற்கு நியமிக்கப்பட்டார். 1856-ம் ௵த்தில் சமாதானம் நடந்த சிலநாளையில் அவ்விடத்தைவிட்டு ஹேக் என்னும் பட்டணத்திற்கு வேதனோத்தியோகஸ்தராகப்

போனார். பின்பு இரண்டுவருஷகாலங்கழித்து ஸெண்ட் பீடர்ஸ் பர்க்கில் ஸ்தானாதிபதியாய் ஏற்பட்டுப் பின்னும் இரண்டுமூன்று மாதத்தில் கான்ஸ்டான்டிநோபிலில் ஸ்தானாதிபதியாகிப் பிறகு 1859–ஞு ஜனவரிமீ 6உ வியானாவிற்கு அதே உத்தியோக மாய் அனுப்பப்பட்டார். அக்காலத்தில் மிகவும் நம்பிக்கை யும் உத்தரவாதமுமான காரியங்களையுஞ் செய்யும்படி நியமிக் கப்பட்டார். அதாவது: பெல்க்ரேட் பட்டணத்திற்குத் தூதுபோ னார்; துருக்கர்களுக்கும் ஸர்வியர்களுக்கும் மூளப்போவதாயிருந்த கலகத்தை அடக்கும்படி அனுப்பப்பட்டார். பின்பு 1862–ஞு அக்டோபர்மீ 1உ நமது மகாராணியாரவர்களுடைய ஸ்தானாதிபதி களுக்கு இரண்டாவது காரியதரிசியாகவும், 1863–ஞு ஜனவரிமீ 16உ கான்ஸ்டான்டிநோபிலில் ஸ்தானாதிபத்திய காரியதரிசியாக வும், 1872–ஞு அக்டோபர்மீ 5உ பாரிஸ்பட்டணத்தில் ஸ்தானாதி பத்திய காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டு அவ்விடத்தில் மிக வும் சாமார்த்தியமும் நிர்வாகசக்தியுமுள்ளவரென்று பிரசித்தி பெற்றார்.

லார்ட் லிட்டன் பிரபு அவர்கள் முதல் முதல் செய்த கவி அவ ருடைய இருபத்தினான்காம் வயதில் பிரசுரஞ்செய்யப்பட்டது. அந்தக் கவியின் திறத்தைக் கண்டு கவிராஜபண்டிதர்களும் புகழ்ந்த னர். அதனால் இவர் மகா வித்வானென்றும், கிரந்தங்கள் செய் யத் திறமையுள்ளவரென்றும், பிரசித்தியுண்டாயிற்று. பிறகு பல விநோதக்கதைகள், அநேக வசனகாவியங்கள், ஜர்மன் தேசத்து வைத்தியரொருவர் பிரசித்தப்படுத்திய பத்திரிகைகளிற்கண்ட விஷயங்களின் சங்கிரகம், செய்யுள், நாடகம்முதலிய பல கிரந்தங்கள் பிரசுரஞ்செய்யப்பட்டன. அவர் செய்த அநேக பிர சங்கங்களும் இன்னுஞ் சில கிரந்தங்களும் இதுவரையில் பிரசுரஞ் செய்யப்படாமலிருந்து, சென்ற 74–ஞுத்தில் அச்சிடப்பட் டன. 1874–ஞு டிசம்பர்மீத்தில் லிஸ்பன் நகரத்தில் ஸ்தானாதிப தியாக நியமிக்கப்பட்டார். முன் இச்சென்னை ராஜ்யத்துக் கவர்ன ராயிருந்த லார்ட் ஹபர்ட் துரையவர்கள் பரலோகஞ்சென்ற போது மேற்படி ஸ்தானத்தை ஆளும்படி கேட்டதற்கு மாட்டோ மென்று மறுத்துவிட்டார். பின்பு சிலநாளில் இத்தேசத்துக் கவர் னர் ஜெனராலாயிருந்த லார்ட் நார்த்ப்ருக் பிரபு சுதேசத்திற்குப் போனபோது, இந்த லிட்டன் பிரபு மகாராணியார்க்குப் பதிலாய்

இத்தேசத்தைச் செம்மையாயாளத் திறமையுள்ளவரென்று மந்திரிகள் தெரிந்தெடுத்து இத்தேசத்திற்கனுப்ப, இவரும் சந்தோஷமாய்ச் சம்மதித்துவந்து இன்சொல்லும், தாழ்நடையும், உய்த்துணர்வுமுடையவராய் நீதிமுறைதவருமல் அரசுசெலுத்திவருகிருர்.

இப்போது சிறிதுகாலமாய் இச்சென்னைப் பிரதேசத்தில் மகா க்ஷாமம் நேரிட்டுக் குடிகள் வெகுவாய் வருந்துவது கேள்வியுற்று அந்த வருத்தத்தைத் தாமே நேரில்கண்டு அதற்குத் தக்கதோருபாயந் தேடவேண்டுமென்று இவ்விடத்திற்குவந்து நமது கவர்னரவர்கள் மாளிகையில் கொலுமண்டபத்தில் வீற்றிருந்து அநேகர்க்கு காட்சியளித்தனர். அவரைக் காணநேராத மற்றவரும் எளிதிற் காணும்படி அவருருவத்தை இச்சஞ்சிகையுடன் சேர்த்திருக்கிரும்.

இந்த மாதம் அவசரக்காரியமாய் லார்ட் லிட்டன் பிரபு வட இந்துஸ்தானத்தை விட்டுப் புறப்படும்போது, தமது ஆலோசனைச் சங்கத்தில் தம் அபிப்பிராயங்களை எழுதிவைத்துவந்தார். அவற்றுள் சென்னைப் பிரதேசத்தைப்பற்றிச் சொல்லியவைகளை இதனடியில் சுருக்கிக்காட்டுகிரும்:—

இப்போது சிறிதுகாலமாய் சென்னை ராஜதானி பஞ்சத்தால் வருந்துவதனால் அதைத் தக்ககாலத்தில் போய்ப் பார்க்கவேண்டுவது அவசியமாயினும், திடீரென்று நாம் போவது அவ்விடத்து அதிகாரிகளுக்குச் சங்கடங்களையும் தடுமாற்றத்தையும் உண்டுபண்ணி, அவர்களுக்கு உபகாரமாயிருப்பதைவிட்டு உபத்திரவமாய் முடியுமாதலால், இனி அவ்விடங்களில் க்ஷேமகாலம் வருமென்றெண்ணி அவ்விடங்களுக்குப் போகாமல் நின்றிருந்தேன்; ஆயினும் பஞ்சத்தின் கொடுமைகள் வரவர அதிகமாகி, அதைத் தடுப்பதற்காகச் சென்னைத்துரைத்தனத்தார் பலவிதமாகப் பாடுபட்டும் அதை ஒரு லக்ஷியமாகக்கொள்ளாமல், மேன்மேலும் பரவி வருவதனால், இத்தருணத்தில் நாம் அவ்விடத்திற்குச் சென்று சென்னைக் கவர்னரவர்களுக்கு எவ்விதத்திலும் துணைசெய்வது இன்றியமையாக் காரியமாயிருக்கின்றது. அதாவது: நாம் இப்போது காலஸ்திதியோடு பலமாய்ப் போராடப் புகுந்திருக்கிரும். எங்கும் ஒழுங்குபட்டிருக்கும் நமது முயற்சிகள் சென்னையிலும் மைசூரிலும் எவ்வளவிருந்தும் போதாமல் விசேஷமாய் வேண்டியிருப்பதனல் நாம் மேன்மேலும் முயற்சிசெய்து அவ்விடங்களில் மனங்கலங்கித் தத்தளிக்கும் பிரஜைகளைப் பாதுகாப்பது அவசியம். ஆதலால் நான் இப்போது தென் இந்தியாவில் க்ஷாமத்தால் கிலேசமடைந்திருக்கும் பல நாடுகளைப் பார்க்கப்போவது முக்கியமாய்ச்

சென்னைக் கவர்னருக்குத் தக்க உபாயங்களைத் தேர்ந்தறிவிப்பதற்காகவேயன்றி வேறல்ல. டியூக் அவ் பக்கிங்ஹம் பிரபுவுக்கு இந்த க்ஷாமோபத்திரவத்தைத் தணிக்க எப்பெப்போது என்னென்ன யுத்தியும் ஆலோசனையுந் தோன்றுகின்றனவோ அப்பப்போது அவ்வாறு நடத்தக் கருவிகளைக் கொடுத்து அவரை ஸர்வசுவாதந்திரியமுமுடையவராயிருக்கச்செய்தால், இப்பொழுது ஏங்கிநிற்கும் சென்னைராஜ்யத்தில் துரைத்தனத்தார் முடிவில் காரியசித்திபெறலாமென்று சொல்லத்துணிகிறேன். மன்னுயிருக்குக்கூடியவளவு ஆழ்ந்த ஆலோசனையும் திடசித்தமும் நிர்வாஹசக்தியும் அதிகாரிகளுக்கு அமைந்திருந்தால்தான் இப்போது அந்நாட்டைச் சூழ்ந்திருக்கும் பஞ்சமென்னும் சத்துருவை வெல்லக்கூடும்.

இவ்வாறு கவர்னர் ஜெனரலவர்கள் தீர்க்காலோசனை செய்துவந்து தாம் உத்தேசித்தபடியே சென்னைக் கவர்னரவர்களின் சம்மதியோடு புதிய ஏற்பாடு செய்துவருகிறார். இந்தப் பிரபுவினுடைய நல்லெண்ணத்தை நிறைவேற்றி இப்போது நேர்ந்திருக்கும் விபத்தினின்றும் குடிகளைக் கைதூக்கிக் கடாக்ஷிக்கும்படி கருணைக்கடலான கடவுளைப் பிரார்த்திக்கக்கடவோம்.

## நுட்பபுத்தியுள்ள நியாயாதிகாரி.

நியாயவிசாரணைச் சபைகளில் நியாயாதிகாரி சிங்காசனத்துக்கு நேராகத் துலாக்கோலொன்று வெகுவாய்ச் சித்திரித்திருப்பதுண்டு. அதன் கருத்தென்னவெனில், துலாக்கோல் இருதட்டிலுமுள்ள சாமான்களைத் தினையளவும் பிசகாது சரியாய் எப்படி நிறுக்கின்றதோ அப்படியே, நியாயாதிபதிகளும் வெகு நுட்பமாய் ஆய்ந்துபார்த்து வாதிப்பிரதிவாதிகளிடத்திலுள்ள நியாயாநியாயங்களைச் சரியாய்க் கண்டறியவேண்டுமென்பதே. நியாயவிசாரணைசெய்வதைவிடக் கடினகாரியம் வேறொன்றுமில்லை. நியாயாநியாயங்களை நுட்பமாய் ஆய்ந்தறிந்து தக்கபடி தண்டனை விதிப்பவர்களை நாம் தெய்வமென்றே கொண்டாடவேண்டும். சாக்ஷிவிசாரணைமுதலியவைகளைக்கூட விசேஷமாய் நம்பாமல் தங்களுடைய யுக்தி ஆலோசனைமுதலியவைகளையே அதிகமாய்ச் செலுத்துகிறவர்கள்தாம் நியாயவிசாரணைத் திறமையுடையவர்களாவார்கள். இதற்குத் திருஷ்டாந்தமாய் ஒரு கதை சொல்வதுண்டு. என்னவெனில்:—

அரபிதேசத்து வர்த்தகன் ஒருவன் ஒருகால் தேசாந்தரயாத்திரைசெய்யக் கருதித் தன் வெள்ளிசாமான் முதலானவைகளை

வேலைக்காரர்வசத்தில் ஒப்புவித்துப்போக மனமில்லாமல், மிகவும் பிராமாணிகனென்று தான் நெடுநாளாய் நம்பியிருந்த தோழனை ஒரு கோமுட்டிகையில் கொடுத்துவிட்டுப் போகத் தீர்மானித்தான்.

அவ்வாறே அந்த வணிகன் தன் சாமான்கள் யாவையும் கோமுட்டிகையில் ஒப்புவித்து யாத்திரைபோய்ச் சிலமாதங்கழித்துத் திரும்பி ஊர்வந்து சேர்ந்தபிறகு ஒருநாள் தான் கொடுத்துவைத்த சாமான்களை வாங்கிக்கொண்டு வரும்படி கோமுட்டிவீட்டுக்குப் போனான். போய்க் கேட்டபோது அந்தக் கோமுட்டி, வணிகன் திடுக்கிடும்படி, உன்னைக்கண்டதுயார்! உன் பொருளைக்கண்டது யார்! என்று ஒரே சாதிப்பாய்ச் சாதித்து: நான் ஒன்றுமறியாம லிருக்க, என்பொருளைக் கொடுவென்று வெகு தைரியமாய்க் கேட்கிறாயே, உனக்கு என்ன துணிச்சலடா என்று அவனைப் புலவிதமாய்த் திட்டினான்.

அதைக் கேட்கவே வணிகன் மிகவும் விசனமடைந்து அவனெதிரில் ஒரு வார்த்தையும் சொல்ல நாவெழாமல் நேராய் நியாயாதிகாரியண்டைபோய்த் தனக்கு நேரிட்ட அநியாயத்தை முறையிட்டுக்கொண்டான். நியாயாதிகாரி அதைச் செவியுற்று: நீ நம்பிக்கையையே முதன்மையாய்க்கொண்டு இக்காரியஞ்செய்திருக்கிறாய்; நான் எவ்விதமாய் உனக்கு உதவுகிறதோ தெரியவில்லை. நீ சொல்லுவது உண்மையென்று நிரூபிக்கச் சாக்ஷியுமில்லையே; நல்லது ஒரு யோசனைசெய்து பார்ப்போம்; நீ நிராசைகொள்ளவேண்டாம், நாளை இந்நேரத்துக்கு வா; வழி சொல்லுகிறேன் என்றான்.

அப்படியே ஆகட்டுமென்று வர்த்தகன் வீடுபோய்ச் சேர்ந்தான். அவன் புறப்பட்டுப்போனதும் நியாயாதிகாரி, தன் வீட்டுக்கு விருந்துண்ண வரும்படி, அந்தக் கோமுட்டிக்குச் செய்தி சொல்லியனுப்பினான். அதைக்கேட்டு அவனும் சந்தோஷமாய் வந்து சேர்ந்தான். நியாயாதிகாரி அவனை மிகவும் பிரீதியாய் வரவழைத்துச் சிறிதுநேரம் லோகாபிராமமாய்ப் பேசிக்கொண்டிருந்து வார்த்தைமேல் வார்த்தையாய்: அந்தக் கோமுட்டி மிகவும் கற்றறிந்த கனவானென்றும் சிறிதும் பொய்புரளியில்லாத பரிசுத்தாத்மாவென்றும் யாவரும் அவனைத் துதிசெய்யத் தான் கேள்விப்பட்டிருப்பதாயும், அதனால் தான் அவனிடத்தில் பூரணமான நம்பிக்கைவைத்திருப்பதாயும் எடுத்துரைத்தான். இப்படிச் சிறிதுநேரம் பேசியபிறகு கடைசியில், என் உயிர்த்தோழரே! இப்போது நான் உங்களை இவ்விடம் வரவழைத்ததற்கு முக்கியகாரணம் ஒன்றுண்டு: யான் ஒருகாரியத்திற்காக வெளியேபோகவேண்டியிருக்கிறது; போனால் வரச் சிலமாதங்கள் செல்லும்; அதுவரையில் என் வீட்டுச்சாமான்களை யாரிடத்தில் வைத்துப்போகிறதோ தெரியவில்லை. யாவையும் விலையுயர்ந்த பொருள்களாதலால் வே.

லைக்காரரிடத்தில் நம்பிக் கொடுத்துப்போவது பிசகு. ஒருவரும் தகுந்தவராய் அகப்படவில்லை. நான் போய்வருகிறவனாயில் தாங்கள் என்னிடத்தில் தயவுசெய்து சாமான்களை வைத்துக் காப்பாற்றிக் கொடுப்பதானால், நாளை ராத்திரி என் சாமான்பெட்டிகளையெல்லாம் எடுத்துத் தங்கள் வீட்டுக்கு அனுப்பிவிடுகிறேன் என்றான்.

கோமுட்டி அதைக் கேட்டு, தன்னிடத்தில் நியாயாதிகாரி பூரணநம்பிக்கை வைத்திருக்கிறாரென்று அதிக சந்தோஷமடைந்து, அவர்க்கு முகஸ்துதியாய்: ஒன்றுமறியாத என்னைத் தாங்களே இவ்வளவு கனப்படுத்தும்போது எனக்கு இதைவிட மேன்மை வேறென்ன! அப்படியே தங்கள் பொருள்களையெல்லாம் என் சொந்தப்பொருள்போலவே காப்பாற்றுகிறேன். தங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படியாதிருப்பதுண்டாவென்றான். வணிகன் சொத்தைக் கைப்பற்றினதுபோலவே இந்தப் பொருளையும் அவன் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ளக் கருதினனென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை; அதனால் பின்னும் அவர்க்குத் தன்னிடத்தில் விசேஷ நம்பிக்கை தோன்றும்படி நெடுநேரம் பேசிவிட்டுக் கோமுட்டி வீடுபோய்ச் சேர்ந்தான்.

மறுநாள் வர்த்தகன், தன்னை வரும்படி நியாயாதிகாரி நியமித்திருந்ததருணத்திற்கு வந்து சேர்ந்தான். அவனைப்பார்த்து நியாயாதிகாரி: நீ இப்போது நேராய்க் கோமுட்டிவீட்டுக்குப்போய் உன் பொருளைக் கொடுக்கும்படி நிர்ப்பந்தஞ்செய்து கேள்; இல்லையென்று சொல்வனாகில், உடனே நியாயஸ்தலத்திற்சென்று பிரியாதுசெய்வதாய்ப் பயமுறுத்து; அதன்பிறகு என்னநடக்கிறதோ பார்ப்போம் என்று சொல்லியனுப்பினான். அவன் அவ்வாறே கோமுட்டிவீட்டிற்குப் போய்த் தன் பொருளைத் தரும்படி உறுத்திக் கேட்க அவன், ஏதுபொருளென்று முன்போலவே ஒரேபிடியாய்ப் பிடிக்கவே வணிகன், ஆனால் இனி எனக்கென்னகதி; உடனே நியாயாதிகாரியண்டைபோய்ப் பிரியாதுசெய்யப்போகிறேன் என்றான்.

அதைக் கேட்கவே கோமுட்டி: ஓகோ இதென்ன மோசமாயிருக்கிறதே! இந்தப் பிரியாதைக்கேட்டு நியாயாதிகாரி நான் மோசக்காரனென்று தெரிந்துகொண்டு தன் பொருள்களை அனுப்பாமல் நிறுத்திக்கொள்ளப்போகிறாரே! இவனுடைய அற்பப்பொருளுக்கு ஆசைகொண்டு அளவற்ற சொத்தை இழக்கும்படியாகுமோவென்று பயந்து திகிலடைந்து, இவனை நாம் இந்நேரம் பரிஹாஸஞ்செய்ததாய்ப் பாவித்துவிடவேண்டுமென்று நிச்சயித்து: ஆனாலென்ன, நீ இப்போது நான் உன் பொருளையெடுத்துக்கொண்டு மோசஞ்செய்வதாக நினைத்தாயோ? நான் பிராமாணிகன் என்று உலகமெங்கும் பேர்பெற்றவனாயிற்றே; அதுமாத்திரமேயன்றி உனக்கு உயிர்த்தோழனாயுமிருக்கிறேனல்லவா! அப்படியிருக்க என்னை

மோசஞ்செய்கிறவனென்று நீ எப்படி நினைக்கிறாய்; இப்படிப் பட்ட கெட்ட எண்ணம் நீ இனி ஒருபோதும் கொள்ளாதே; சிறிது நேரம் பயமுறுத்தி உன்னை அலைக்கழிக்கலாமென்றிருந்தேன்; இப்போது நீ வேறெண்ணங்கொண்டதினால் இதோ உன் பொருள்கள், சுகமாய் எடுத்துக்கொண்டு போகலாமென்றான்.

வணிகன் இவையெல்லாம் உண்மையென்றே நம்பி அவனிடத்தில் மிகவும் நன்றிபாராட்டித் தன் சொத்தைக் கைக்கொண்டு சந்தோஷமாய் நியாயாதிபதியினிடம் வந்து பொருள்கிடைத்த சந்தோஷத்தை விண்ணப்பஞ்செய்தான். அதைக்கேட்டு நியாயாதிகாரி நகைத்து: இனி நீ தாராதரமறியாமல் ஒருவனை நம்பி இப்படிப்பட்ட செய்கை ஒருபோதுஞ்செய்யவேண்டாம்; சாக்கிரதையாயிருந்து பிழைக்கக்கடவை என்று நற்புத்திசொல்லி அனுப்பினான்.

அன்றையதினம் பொழுது பட்டதும் படாததுமாய்க் கோமுட்டி தெருவில்வந்து உட்காந்து தான் எதிர்பார்த்திருந்த அளவற்ற பொருள்கள் நியாயாதிபதியினிடத்திலிருந்து வருமென்று இரவு முழுதும் கண்கொட்டாமல் அந்தத் திக்குநோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தான்; இலவங்காத்த கிளிக்கதையாய்விட்டது. அதனால் அவன் இதென்னவென்று சந்தேகமடைந்து, மறுநாள் பொழுதுவிடிந்ததும் நியாயாதிகாரிவீட்டிற்குச் சென்று, நேற்றுராத்திரி சாமான்களை ஏன் அனுப்பவில்லை என்று கேட்க, நியாயாதிகாரி: இதற்குக் காரணந்தெரியாதோ! உன்னைப்போல் புரளிக்காரன் உலகத்தில் ஒருவனும் இல்லையென்று ஒரு வணிகன் சொல்லக் கேள்விப்பட்டேன். இனி இப்படிப்பட்ட பிரியாது ஏதாவதொன்று உன்மேல் வருமாயின், அதற்குத் தக்கதண்டனை உடனே நேரிடும்; இந்தவேளை மன்னித்துவிட்டேன்; என்முன் நில்லாமல் ஓடிப்போவென்று வெருட்டித்துரத்தினான். "சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம், பெரியோராயிற் பொறுப்பதுகடனே." இப்படி இருகக்ஷியிலுமுள்ள குணதோஷங்களைச் செம்மையாய் ஆய்ந்தோய்ந்து பார்த்து நீதிமுறைதவறாமல் நடப்பவர்கள்தாம் தமது பேரும் புகழும் நீடூழிகாலம் நிலைபெற்றிருக்கும்படி பிரசித்தி பெற்று வாழ்வார்கள்.

"இருவர்தஞ்சொல்லையு மெழுதரங்கேட்டே
இருவரும்பொருந்த உரையாராயின்
மனுநெறிமுறையின் வழக்கிழந்தவர்தாம்
மனமுறமறுகிநின் றழுதகண்ணீர்
முறையுறத்தேவர் மூவர்காக்கினும்
வழிவழியீர்வதோர் வாளாகும்மே"

# மனதின் உறுப்புகள்.

நமது சரீரம் சவுக்கியமாயிருப்பதற்காக தேஹப்பயிற்சி செய்யவேண்டுவது எப்படி அவசியமோ அப்படியே மனது சவுக்கியமாயிருப்பதற்காக மனப்பயிற்சியும் அவசியம். கைகள்மாத்திரம் உறுதியாயிருந்து கால் பலவீனப்பட்டிருப்பவனைச் சுகப்பிராணியென்று நாம் சொல்வோமா? அப்படியே கால்களுறுதியாயிருந்து கை பலவீனப்பட்டிருப்பவனையும் சுகப்பிராணியென்று சொல்லமாட்டோம். அப்படியே நன்ருய்ப்பார்க்க வல்லவனுயிருந்து கேட்கச் சக்தியற்றிருப்பவனும் சுகப்பிராணியாகான். இப்படி தேஹத்தின் பலவுறுப்புகளில் எதாவதொன்று குறைவுபட்டாலும் சவுக்கியக்குறைவுதான். ஆதலால் இந்தச் சரீரவுறுப்புகளில் ஒன்றைக்கூட நாம் வேண்டுமென்று விகாரப்படுத்திக்கொள்ள விரும்பமாட்டோம். இதுவே இப்படியிருக்க, நமக்குப் பேருதவியாயிருக்கின்ற மனதின் உறுப்புகளை, அதாவது குணங்களை, கெடுத்துக்கொள்ள விரும்புவோமா? கடவுள் நம்மிடத்தில் கிருபைபண்ணியளித்திருக்கிற பலவித மனோகுணங்களும் நாம் அடிக்கடி மேன்மேலும் பயிற்சிசெய்துகொண்டிராவிட்டால் பலவீனப்படும். அவ்வுறுப்புகளாவன: குதூகலம், காருணியம், சாதுரியம், ஆநந்தம் முதலியனவாம். குதூஹமாவது, நாம் எதையும் சந்தோஷமாய் ஆவல்கொண்டு அறியும்படியாகக் கடவுளளித்த சக்தி; இந்தக் குணத்தை நாம் இழப்போமானுல் மந்தபுத்தியுடையவர்களாவோம். காருணியமாவது, பிராணிகளின் வருத்தத்தைக்கண்டு பரிதாபப்படுகிற சக்தி; அதை இழந்தால் நெஞ்சுறுதியும் கொடுமையுமுடையவர்களாவோம். சாதுரியமாவது, மிகவும் ரஞ்சகமாய்ப் பேசிப் பலரையும் களிப்பிக்கிற திறமையாம்; அந்தக் குணமில்லாவிட்டால் பலரிடத்திலும்போய் விநோதமாய்ப்பேசத் திறமையில்லாமல் ஒருகாரியத்திற்கும் உதவியற்றவர்களாவோம். ஆநந்தமாவது, பல விநோதப்பொருள்களைக்கண்டு களிக்கும் திறமையாம்; இக்குணத்தையிழந்தால் அற்பர்களாயும், கவுரவமற்றவர்களாயுமாவோம். இவ்வாறு மனோகுணங்கள் பலவாயிருக்கின்றன: அவற்றுள் ஒன்றையிழந்தாலும் ஒவ்வொருகாரியத்திற்கு உதவாமற்போவோம். ஆகையால் இவையெல்லாம் நம்மிடத்தில் நன்ருய் நிலைபெற்றிருக்கும்படி நம்மால் கூடியவளவு நாம் அவைகளைப் பயற்சிசெய்துவரவேண்டும். இக்குணங்களை அப்பியசிக்கவேண்டுமென்று ஒருவன் ஆவல்கொள்வானுயின் அவனுக்கு இவைகளைப் பயிற்சிசெய்வது மிகவும் எளிதாகவேதோன்றும். குணங்களின் விஷயங்களைமாத்திரம் நாம் கவனமாய்க் கருதிவருவோமானுல் அக்குணங்களெல்லாம் நன்ருய் நம்மிடத்தில் படிந்துபோம். பல ஜீவஜந்துக்களின் நடுவிலே பழகி அவைகளைப்பற்றிச் சிந்தித்துவருவோமானுல் காருணியகுணம் பழக்கமாம். பல விநோதவஸ்துக்களின் நடுவிலிருந்து அவைகளைப் பார்த்துக்கொண்டிருப்போமானுல் ஆநந்தகுணம் பழக்கமாம். இப்படியே ஒவ்வொரு விஷயத்தையும் கவனமாய்ப் பார்த்துவந்தால், எல்லாக் குணங்களும் நம்மிடத்தில் பூர்த்தியாகி, நாம் மிகவும் மேன்மைபெற்று வாழலாமென்பதற்குச் சந்தேகமேயில்லை.

# கொடுமை.

இவ்வுலகில் எண்ணிறந்த மன்னுயிர்களைக் கடவுள் படைத்திருக்கிறார். அந்தந்தப் பிராணிகளின் மனமும் தனித்தனி ஒவ்வொருவகைக் குணமுடையவைகளாயிருக்கின்றனவேயன்றி, ஒருமனதாவது மற்றொருமனதை ஒத்திருக்கிறதென்பதில்லை. ஒருவர்க்கொருவர் மனதுகளில் எத்தன்மையாய் வேறுபட்டிருக்கின்றனரோ அத்தன்மையாய் உடல்களிலும் வேறுபட்டிருப்பார்களாயின், கிளிக்கும் கழுதைக்கும் எவ்வளவு வேற்றுமையுண்டோ, அதற்கு அதிகமாகவே வேறுபட்டிருக்கவேண்டிவரும். இத்தன்மையாக மனது வேறுபடுவதற்குக் காரணமாய்ப் பற்பல மனோகுணங்களுண்டாயினும், அவைகளுள் முக்கியமானது கொடுமையென்பதொன்றுதான். கொடுமையால் மனது வேறுபடுவதுபோல மற்றெதினாலும் அவ்வளவு அதிகமாய் வேறுபடுவதில்லை. பொதுவாய் யோசித்துப்பார்க்குமளவில், ஆண்பிள்ளைகளைவிடப் பெண்பிள்ளைகள் எவ்வளவு இரக்கமுள்ளவர்களாயிருக்கிறார்களோ, அவ்வளவுக் கவ்வளவு கொடியவர்களாயுமிருக்கிறார்கள். இவ்விருவர்களையும் விடச் சிறுவர்கள் மிகவும் கொடுமைசெய்பவர்கள். இப்படிச் சிலரிடத்தில் அதிக சாந்தகுணமும், சிலரிடத்தில் அதிக மூர்க்ககுணமும் இருப்பதுதான் இந்த வேறுபாடுகளுக்கு முக்கியகாரணம். அக்கொடுமைகளுள்ளும் உட்பிரிவுகள் அநேகமுண்டு; ஆனது பற்றிப் பலவகைக் கொடுமைகளும் இத்தன்மையானவையென்று வரையறுத்து ஓர் இலக்கணங்கூறுவது கூடாது. பிறர்க்கு வருத்தமுண்டாகவேண்டுமென்று கருதி அவர்களை வருத்துவதுதான் கொடுமையென்று பொதுவாய்ச் சொல்லலாம். அப்படியாயின், பிறரை வருத்தவேண்டுமென்கிற கருத்தில்லாமல் தற்செயலாய் நேரிடுகிற பல கொடுமைகள் அந்தப் பொதுவிலக்கணத்துள் அடங்காமற்போய்விடும். நீர்வாழும் ஜந்துக்களில் பெரியவைகள் அநேகம் சிறியவைகளைப் புசித்துவிடுவதுண்டு. அவைகளுக்குத் தாம் செய்கிற கொடுமையும், அதனால் தமக்கு இரையான ஜந்துக்களுக்கு உண்டாகும் வருத்தமும் சிறிதும் தோன்றுவதில்லை. பூனை எலியை வதைக்கும்போது, தான் செய்யும் கொடுமையும் எலிக்குண்டாகும் துன்பமும் அதற்குத் தோன்றுமோ தோன்றாதோ; தோன்றட்டும், தோன்றாதிருக்கட்டும், எப்படியாயினும் அதின் செய்கையால் கொடுமையுண்டாவதைத் தடுப்பது ஒருவராலுமில்லை. எலியின் மனோபாவங்களையும் வருத்தங்களையும் சிறிதும் அறியாமலே அதைச் சித்திரவதை செய்யும்படி பூனை தன் மனதை அதன் விஷயத்தில் அவ்வளவு கொடுமையாய்ப் பழக்கியிருக்கின்றது.

பூனை தன் இரையைத் துன்பப்படுத்துவதில் எவ்வளவு புத்திசாதுரியத்தைச் செலுத்துகின்றதோ; தனக்கொரு விளையாட்டாகவே அதைத் துரத்திப் பிடித்துப் பிறிக் கொல்வதில் எவ்வளவு ஆவல் கொண்டிருக்கிறதோ; இன்னும் என்னென்ன தோற்றங்கள் அதின் மனதிலுண்டாகின்றனவோ இவையெல்லாம் நுட்பமாய் ஆய்ந்தோய்ந்து பரீக்ஷித்துப்பார்த்தாலல்லது அறியக்கூடாதவைகள். இவ்வாறே ஒவ்வொரு பிராணியும் தனக்கு அடங்கிய ஒவ்வொரு தாழ்ந்த ஜீவனிடத்திலும் கடுநெஞ்சுள்ளதாயிருக்கின்றது.

கொடுமைகள் பலவாய் வேறுபட்டிருப்பினும், அவற்றுள் முக்கியமாய் இரண்டு பிரிவுண்டு. ஒருவர்க்கு நோயுண்டாகவேண்டுமென்றுமாத்திரமே கருதாமல் வேறொரு காரியத்தையுங்கருதி, அனுபவிப்பவர்க்கு இப்படிப்பட்டதென்று முன்னதாய்த் தெரியாமலே, செய்கிற கொடுமையொன்று; பிறர் துன்பப்படுவதே காரியமாய்ச்செய்கிற கொடுமை மற்றொன்று. இவ்விருவகைக் கொடுமையிலும் சம்பந்தப்பட்டு இவ்விருகருத்துமுள்ளதாய், தாம் செய்த கொடுமையைப் பிறர் அனுபவிக்கக்கண்டு ஆனந்தம் அடைந்து, அத்தீங்குசெய்தாலொழியத் தீராதுபோலப் பாவித்து, வேறொரு பெருங்காரியத்தைக்கருதிச் செய்யுங் கொடுமைகள் அநேகமுண்டு. அவற்றுள் இயற்கையிலேயே உண்டாகுங் கொடுமைகள் சில; இவைதாம் மிருகத்தன்மையென்று சொல்லப்படுவன. இவ்வகைப் பொல்லாங்குகள் நாகரிகமும் பெருந்தன்மையும் விருத்தியாக ஆக நாளளவில் நீங்கிப்போகத்தக்கவை. பெருந்தன்மை விருத்தியாக ஆக அதிகரிக்கிற கொடுமைகளும் அநேகமுண்டு; இவை பற்பல ராஜாக்களும் போர்வீரர்களும் மற்றவர்களும் ஒருவர்மேலொருவர் ஆவேசங்கொண்டு ஜயம்பெறவேண்டுமென்று போர்செய்யுங்காலங்களில் உண்டாகின்றவை; இக்கொடுமைகளைப் பவுருஷமென்று சொல்வார்கள். இவையல்லாமல் ஒவ்வொரு வீட்டிலேயே ஒருவர்க்கொருவர் அடிக்கடி சண்டையுஞ் சச்சரவுமாயிருக்கக்காண்கிறோம்; அவ்வகைப்பட்ட பல பொல்லாங்குகள், மனதில் இரக்கம் பூததயையென்பவை சிறிதுமில்லாமையாலுண்டாகின்றவை. கடைசியாய் இன்னொருவகைக் கொடுமையுண்டு, அவை எண்ணிறந்தவை. துரைத்தனத்தார் தமது உத்தியோகஸ்தர்களை நோய்செய்வதும், அந்த உத்தியோகஸ்தர்கள் தம்மதிகாரத்துள் அடங்கிய வேலையாட்களிடத்தில் அவர்கள் சுமக்கமாட்டாத சுமையைப்போட்டு அவர்களை வருத்துவதும், இன்னும் மற்ற அதிகாரிகள் தமது ஊழியக்காரர்களை உபத்திரவிப்பதும், தமது லாபத்தையே கருதிப் பெற்றோர் பெண்களைக் கலியாணக்கடையில் வைத்துக்கொண்டு தமது இஷ்டப்படி விலைகூறுவதுமாகிய இவைமுதலாக மனதிற்குத் தெரிந்துந் தெரியாமலும் செய்யப்படுகின்ற தீமை பலவுள. இவை

யெல்லாங் கொடுமையல்லவென்று சொல்ல ஒருவராலுமாகாது. இவையெல்லாம் மனதில் இளக்கமின்மையால் உண்டாகுங் கொடுமைகள். அநேகங் கொடுமைகள் சுபாவத்திலுண்டாகின்றன; அநேகம் கொடுமைகள் வழக்கத்தாலுண்டாகின்றன; அநேகங் கொடுமைகள் சுயப்பிரயோஜனத்தையே கருதிப் புத்திபூர்வமாய் இயற்றப்படுகின்றன; அநேகங்கொடுமைகள் அவிவேகத்தாலும் அறியாமையாலும் இயற்றப்படுகின்றன; அநேகங்கொடுமைகள் ஆனந்தத்தையும் களிப்பையுமே முதன்மையாய்க் கருதி அலக்ஷியத்தால் இயற்றப்படுகின்றன; அநேகங்கொடுமைகள் பிடிவாதத்தாலியற்றப்படுகின்றன; அநேகங்கொடுமைகள் பகையினுலியற்றப்படுகின்றன. இவ்வகையாய் உலகத்தில் அளவிறந்த கொடுமைகள் ஏற்பட்டு விசுவாஸத்தை வேரறுத்துக்கொண்டிருக்கின்றன.

இவ்வகைக் கொடுமைகளுள் சில அதிகாராபேக்ஷை, ஒருவனைக்கு தூஹலம், பகைதீர்த்தல் முதலியவைகள் சேர்ந்து உண்டாகின்றன. முக்கியமாய்ப் பார்க்குமளவில், முடிவில் இரக்கமும் அநுதாபமும் தோன்றுவதாயினும், முதலில் ஆவலும் களிப்புங் கலந்துதான் கொடுமைகளுண்டாகின்றன. கொடியவர்களுக்கு இத்தன்மையான தீக்குணங்கள் சுபாவமாயும் வம்சக்கிரமமாயும் வருவனவாகையால், தீங்குசெய்வதனுல் அவர்களுக்குக் களிப்புண்டாவதைத் தடுக்க நம்மால் முடியாது. ஏதாவது ஒரு ஜந்து தம்மால் வருந்தித் தவிக்கக்கண்டாலல்லது அவர்களுடைய ஆவல் அடங்குவதில்லை. இன்னும் பூராயமாய்ப் பார்க்குமளவில் அநேகர்க்கு இவ்வகைக் கொடியகுணங்களாலுண்டாகுங் களிப்பும் ஆனந்தமும் மிகவும் ஆச்சரியகரமாயிருக்கக்காணலாம். ஓயாமல் ஏதாவது ஒன்றைத் துன்பப்படுத்திக்கொண்டிருப்பதிலேயே அநேகர்க்கு அதிக நோக்கம்; அப்படித் துன்பப்படுத்துவதினுல் அவர்களுக்கு அதிகமாய் மனவெழுச்சியும் உற்சாகமும் உண்டாகின்றனவாயினும், கள்ளன் தனது கள்ளத்தனத்தை ஒளிப்பதுபோல், அவர்களும் தமது மனோகுணங்களைக் கூடியவளவு ஒளிக்க எத்தனிக்கிறார்கள். ஆயினும் ஒவ்வொரு வேளைகளில் அக்குணங்கள் மிகவும் வலியவைகளாகி அவ்வளவு எத்தனங்களையு மீறிக்கொண்டு வெளியேவந்து கூத்தாடுவதுண்டு. இவ்வகைக் குணங்களெல்லாம் ஒருவனைப் பைத்தியமேயன்றி வேறல்ல. விசித்திரமான இயற்கையுடைய சிலரிடத்திலேதான் இக்குணங்கள் இவ்வாறு எல்லைகடந்திருக்கக்காணலாம்.

இந்தக் குணதிசயங்களைக் கண்டறிவதில் விசேஷமாய்ப் பயனில்லாவிடினும் பார்க்கப்பார்க்கப் புதுமையாயிருக்கும். இவையெல்லாவற்றுள்ளும் யாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டுவது ஒன்றுண்டு. இந்தக் கொடிய குணமானது சிலரிடத்தில் துளித்துளியாகவும், சிலரிடத்தில் அதினுங் குறைந்தவளவாகவும், சிலரிடத்தில்

பெரிய அளவாகவும் இப்படிப் பலரிடத்தில் பற்பலவிதமாகத் தமது பகுதிகளைப் புகுத்தி இப்பூலோகத்திலுள்ள பலவகைப் பிராணிகளுக்கும் ஒழுக்கம், ஆசாரம், இயற்கை முதலியவைகளில் பலவித வேறுபாடுகளை உண்டாக்குகின்றது. ஓரே காலத்தில் அதிகமாகச்செலுத்தினால் அருவருப்பும் அபகாரமுமுண்டாக்கத்தக்க குணங்களையே துளித்துளியளவாகச் செலுத்தினால் மிக்க உபயோகமும் ஆனந்தமுமாக முடியுமென்பது நமக்கு எவ்வளவு இனிப்பும் ஆவலும் உண்டாக்குகின்றது! கொடிய விஷங்களும் சிறிதளவாய் உபயோகிக்கப்படுமானால் சிறந்த பயன்களைத் தருகின்றன. அதுபோலவே அணுவணுவாய் உபயோகிக்கப்படுங் கொடுமைகள்கூடப் பிராணிகளுக்கு விசேஷருசியையும் ஆநந்தத்தையுந் தருகின்றன. ஆயினும் அதில் ஒன்றுண்டு; ஒருவனுக்கு அணுவளவாயிருப்பது மற்றொருவனுக்கு மலையளவாயிருக்கும். ஆதலால் சிறுமையும் பெருமையும் அவ்வவ்வுயிருக்கு ஏற்றபடியேயொழிய பொதுப்பார்வைக்குத் தோற்றியபடியல்ல: விளையாட்டென்பது புலிகளுக்குமுண்டு, ஆடுகளுக்குமுண்டு. புலிகளின் விளையாட்டு ஆடுகளின் விளையாட்டைப்போலாகுமா? ஆடுகளுக்குப் பிராணபத்தாயிருக்கின்ற புலிகளின் விளையாட்டுகள், அவைகளுக்குத் தம்மினத்துள் கொடுமையற்றதாயும் விநோதமாயுமிருப்பதுமன்றி, மிருகேந்திரர்களுக்கு இயற்கையிலேயே சுவதந்திரமாய்க் கிடைத்த எண்ணிறந்த கொடுமைக்களஞ்சியங்களை அற்ப ஜந்துக்களின்மேல் உபாயமாய்ச் சரிக்கச்சரிக்க, விசேஷமாய் ஆநந்தத்தையும் ஆரவாரத்தையும் தருகின்றன. ஆகையால் வீரத்தனமும் விளையாட்டும் இப்படிப்பட்டவையென்பதை அவ்வவற்றின் தராதரத்தினாலேதான் கண்டுகொள்ளவேண்டும். ஒருவனுடைய விளையாட்டு மற்றொருவனுக்குப் போராட்டமாகவும், மற்றொருவனுடைய போராட்டம் ஒருவனுக்கு விளையாட்டாகவுமிருக்கின்றன. 'பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டம்' எனப் பெரியோர் பலதடவைகளில் வழங்கக் கேட்டிருக்கிறோமல்லவா? ஆதலால் எளியவர்களை வெருட்டித் துரத்துகிற தைரிய பராக்கிரமங்கள் வல்லவர்களுக்கு இயற்கையே. பண்டிதர்களுடைய யுத்தியும் சாமர்த்தியமும், மூடர்களுக்குத் தலைச்சுமையாயிருப்பினும் நன்றாய்க் கல்விப்பயிற்சிசெய்து தேர்ந்த மற்றொருவருக்கு எவ்வளவு இனிப்பாயிராது! ஆகையால் எவ்வகைக்குணங்களும் அநேகருக்கு ஆநந்தகரமாகவேயிருக்கும். வேறொருவனிடத்திற் செலுத்தினாலொழியக் கொடியவைகளாகத் தோன்றா.

இவ்வாறு ஜனங்களின் கொடுமை பலவிதமாயிருப்பதுபோல, அமைதி அல்லது ஸவும்மியகுணமும் பலவிதமாயிருக்கின்றது. இவ்வுலகவாழ்க்கைக்கு இன்றியமையாததான தைரியத்திற்கும் துணிவிற்குமாத்திரமே அனுகூலமாகும்படி ஒருவாறு தன் இயற்

கையினின்றுந் தணிந்த கொடுமையின் சாயம் நுட்பமாயேறினு லன்றி அவ்வமைதி அழகுபெற்று நன்றாய்ச் சோபித்திராது. அத னுடன் அநுபவம், யுக்தி, சாதுரியம், சாமர்த்தியம் இவைகளோடு கூடிய பெருந்தன்மையும் பொருந்தியிருக்கவேண்டும். அப்படி யில்லாமல் ஸவும்மியகுணம் ஒன்றுமாத்திரமே தனித்திருக்குமா யின் அந்தப் புருஷன் தனித்து ஒரு மூலையிலிருக்கத்தக்கவனே யன்றி, சபைகளில் வந்து முன்னின்று பலபேரோடு கூடிவாழ்வ தற்கு வல்லமையுடையனல்லன். கொஞ்சம் கொடுமைகலந்ததைரி யமும் பக்ஷபாதமின்மையும் இருந்தாலொழிய, யாருக்கென்னவரு த்த முண்டாகுமோவென்கிற பயத்தினல், பலபேர் முன்னிலையில் ஒருவிஷயத்தையும் எடுத்துரைக்க ஒருவர்க்கும் மனமெழாது.

பெண்பிள்ளைகளுக்கு அநுதாபப்படுகிற குணம் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு கொடு மைசெய்கிற குணமும் அதிகமாயிருக்கிறதென்று முன்னமே சொல் லியிருக்கிறோமல்லவா? அக்கொடுமைக்குணத்தை அவர்களும் அடக்கமாட்டார்கள். நமக்கும் அதைத் தடுப்பது அசாத்தியம். அவைகளுள் நாம் ஆவலோடு கேட்டறியத்தக்கதாய் இருவகைக் கொடுமையுண்டு. அவை மிகவும் நுட்பமாய்த் தமக்குத்தாமே மன தைவிட்டு வெளியேவந்து தோன்றும். இவ்விருவகைக்கொடுமைக ளும் தம்புருஷர்கள்விஷயமாய்ப் பெண்டுகளால் இயற்றப்படுவன. தமக்குப் பூரணமாய்ப் புருஷர்களிடத்தில் பிரீதியிருந்தாலும், புரு ஷர்களுக்குத் தம்மிடத்தில் அவ்வளவு விசுவாசமுண்டாக்கிக்கொ ள்வதற்காகவும், அவர்களுடைய மனோபாவங்களை நுட்பமாய்ப் பரிசோதிப்பதற்காகவும் அவர்கள்விஷயமாய்ச் சில பெண்கள் கொடுமைசெய்வார்கள். சில பெண்கள் எப்போதும் மிருகத்தன் மையுடையவர்களாய், தம்மிடத்தில் விருப்பமுள்ளவராகட்டும் இல்லாதவராகட்டும், யாவரையுஞ் சித்திரவதைசெய்வதே இயற்கை யாயிருக்கிறார்கள். இவ்வகைப் பெண்களெல்லாம் இல்வாழ்க்கைக் குரிய நற்பெண்டிராகார்கள். பெண்தன்மையும் பதிவிரதாகுணமும் உடையவர்கள், தம்புருஷர்கள் எவ்வேளையில் எதுசெய்தாலும் பொறுத்து அவர்கள் கருத்துக்கிசைந்தபடி எப்போதும் குளிர்ந்த முகமும் இனியவார்த்தையுமாயிருந்து, அவர்கள் புத்திக்கெட்டாத பல புதுமைகள் தமக்குத் தோன்றினலும் அவைகளைத் தக்கதரு ணங்களில் அறிவித்து அவர்களிடத்தில் அன்பும் ஆதரவுமாயிருப் பார்கள். ஸத்தியவானுக்கு ஸாவித்திரி மனையாளாக வாய்த்ததுபோ லவும், கபிலருக்கு ஸ்ரீமதி வாய்த்ததுபோலவும், ஸவுதாஸனுக்கு மதயந்தி வாய்த்ததுபோலவும், ஸகரனுக்குக் கேசினி வாய்த்ததுபோ லவும், வஸிஷ்டருக்கு அருந்ததி வாய்த்ததுபோலவும், சியவன ருக்கு சுகன்னிகை வாய்த்ததுபோலவும், நளனுக்கு தமயந்தி வாய்த்ததுபோலவும் வாய்ப்பவளே நற்பெண்டிரெனப்படுவாள்.

துஷ்யந்தமகாராஜன், 'குலமகட்குத்தெய்வங் கொழுநனே' என்கிறபடி, தன்னையே தெய்வமாயெண்ணித் தன்னிடத்தில் பரிபூரண பக்தியுடையவளாயிருந்த தன் பிராணநாயகியாகிய சகுந்தலையினிடத்தில் ஆசையும் அன்பும் எவ்வளவு வைத்திருந்தானோ, அதைவிடப் பதின்மடங்கு அதிகமாய்க் கொடுமையுங்காட்டினான்; ஆயினும் அதனால் அவள் சிறிதும் மனங்கோணாமல் தன் புருஷனுக்கு உண்டாயிருந்த மதிமயக்கமாறித் தன் நினைவுவருமளவும் காத்திருந்து பின்பு அவரோடுகூடிச் சுகமாக வாழ்ந்தாளல்லவா?

"இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதென்
இல்லவண் மாணாக் கடை."

"இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயின்—இல்லாள்
வலிகிடந்தமாற்ற முரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்."

ஆதலால் தமது சென்ற வாழ்நாளை எப்போதாவது திரும்பிப் பார்க்கும்போது நடுக்கமும் கூச்சமும் அனுதாபமும் இரக்கமும் தோன்றாமலிருக்கும்படி முன்ஜாக்கிரதையாய் நடந்துவருபவர்களைப்போலப் பாக்கியவான்கள் ஒருவருமில்லை. முன்பு அளவற்ற கொடுமை செய்துவிட்டுப் பின்பு அதைப்பற்றி அனுதாபப்படுவதில் எள்ளளவேனும் அநுகூலமுண்டோ?

## தக்காணத்துப் பூர்வகதை.

### நரியும், அம்பட்டனும், ஏழுபெண்ணுள்ள ஒரு பிராமணனும்

(தொடர்ச்சி.)

ஒரு தேசத்தில் ராஜகுமாரனொருவன், மனவெழுச்சிக்காக நரிவேஷம் பூண்டு சாதாரணநரிகள் செய்யக்கூடாத பல புன்சேஷ்டைகளைச் செய்துகொண்டு விநோதமாய் நாடுசுற்றிவருகையில், ஒருநாள் ஓரிடத்தில் ஏழைப்பிராமணன் ஒருவன் தின்னத்தீனியில்லாமல் ஏழு பெண்களை வைத்துக்கொண்டு தவிக்கக்கண்டு, அப்பெண்களில் மூத்தவளைக் கலியாணஞ்செய்துகொண்டு, தான் ராஜகுமாரனென்று தன் மனையாளுக்கும் தெரியாமலே, பலவகைப்பொருள்களும் நிறைந்து தேவசபைபோல் விளங்காநின்ற தன் குகைக்குள் வசித்துக்கொண்டிருந்தானென்று சென்றமாதத்திற் சொல்லியிருக்கிறோமல்லவா?

இப்படியிருக்கையில் ஒருநாள் அந்த ராஜகுமாரனாகிய நரி தன் குகையைவிட்டு வெளியே வந்து மலைச்சாரலில் உலாத்திக்கொண்டிருந்தது. அந்தச்சமயத்தில் அதன் மாமனான கிழப்பிராமணன் மெல்ல மெல்ல அதனண்டைக்கு வந்துகொண்டிருந்தான். அவனைக்கண்டு நரி மிகவும் மனவருத்தமுற்றது. ஏனெனில் அவன் மிகவும் எளியவனாகையால் தன்னை உதவிகேட்பதற்காகவே தன்

னிடத்திற்கு வருகிறானென்று அது நினைத்தது. அது உண்மை தான். அந்தப் பிராமணன் நரியண்டைவந்து: மருமகனே! நான் சிறிதுகாலம் உன்னுடன் உன் குகைக்குள் வஸித்துக்கொண்டிருக் கலாமா? இப்போது நான் பிழைக்கவழியற்று இருக்கிறேனாகை யால் இத்தருணத்தில் நீதான் என்னைக் கைவிடாமற் காக்கவேண் டுமென்று வேண்டினான்.

அதுகேட்டு நரி: இந்தக் கேடுகெட்ட குடிசையில் நீங்கள் நுழை யலாமா? இங்கே வஸிப்பது உங்களுக்குத் தகுதியன்று. உங்களு டைய மகளை நான் புசித்துவிட்டிருப்பேனென்று சந்தேகமுண்டா னால் அவளை இங்கே வரவழைக்கிறேன் பார்த்துக்கொள்ளலாம்; உங்களுக்கு ஏதாவது உதவிசெய்யக்கூடுமோ கூடாதோ அதையும் அவளும் வந்தபிறகு கூடிப் பேசிப்பார்ப்போம் என்றது. தன் அரண்மனையை அவனுக்குக் காட்டக்கூடாதென்பது அதன் உண் மையான கருத்து.

அந்தப்பெண் வந்தபிறகு மூவரும் ஒரு பாறைமேலுட்கார்ந்து சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது பிராமணன்: எனக்கு ஜீவனத்திற்கு யாதொரு வழியுமில்லை; நீ கைவிடுவையா னால் என் பெண்டுபிள்ளைகளெல்லாம் கூண்டோடு கைலாசம் போக வேண்டுவதுதானென்று தன் துன்பத்தைப் பரிதாபமாய்ச் சொல்ல, நரி: அது மெய்தான்; உங்கள் குடும்பமெல்லாம் காப்பதென்றால் என்னால் முடியுமா? ஆயினும் என்னால் கூடியவளவு சிறிது உதவி செய்கிறேனென்று எழுந்து குகைக்குப்போய் ஒரு சிறந்த மாதளஞ் செடியைக் கொண்டுவந்து அவன் கையிற்கொடுத்து, இதை நீங் கள் கொண்டுபோய் உங்கள் புழக்கடைத் தோட்டத்தில் நடுவீர் களானால் வேண்டியபடி பலன்கொடுக்கும்; அதை விற்று ஜீவிக்க லாமென்றது. ஸந்தோஷமாய் அவனும் அந்தச் செடியை வாங்கிக் கொண்டுபோய்த் தோட்டத்தில் நட்டுவைத்தான்.

மறுநாள் உதயத்திற்குள் அது, வெகு நேர்த்தியான பழங்கள் அளவற்றுக் குலுங்க, ஓர் அற்புதமான மாதளஞ்செடியாய் வளர்ந் திருந்தது. அதைப்பார்க்கவே அந்தப் பிராமணன், அவனுடைய மனைவி, மக்கள் யாவருக்கும் பேரானந்தமுண்டாயிற்று. அண்டை யயலாரும் இவன் புழக்கடையில் எவ்வளவு சீக்கிரமாய் மாதளஞ் செடி வளர்ந்து பழுத்துவிட்டது பார்த்தீர்களாவென்று ஒருவரோடு ஒருவர் சொல்லி அதிசயித்தார்கள்.

அப்போது வஞ்சகனென்னும் அண்டைவீட்டுக் கோமுட்டி ஒருவனுக்கு மாதளம்பழம் அவசியம் தேவையாயிருந்தது. இவன் தோட்டத்தில் வெகு நேர்த்தியான பழங்கள் பழுத்திருப்பது கேள்விப்பட்டு அவன் இங்குவந்து அவ்வீட்டுக்காரியைக் கேட்டு இரண்டொரு பழம் விலைகொடுத்து வாங்கிக்கொண்டுபோனான். வீட்டுக்குப்போய் அதை அரிகையில், அவன் கண்ட அதிசயத்தை நாம் என்னவென்று சொல்லக்கூடும்! அந்த அதிசயக்காட்சி அவனை பிரமிக்கச்செய்தது. அந்தப் பழத்திற்குள் வெகு நேர்த்தியான விதைகளிருக்குமென்று எண்ணிப் பழத்தை அவன் அரிந்தான். அதனுள் விதையெல்லாம் விலையில்லாமாணிக்கமணிகளாயிருந்தன. அதைப் பார்த்தவுடனே அவன் ஆநந்தக்கடலில் மூழ்கித் தன் கைநிரம்பத் திரவியத்தை வாரிக்கொண்டு வெகு வேகமாய்ப் பிராமணன் வீட்டுக்கு ஓடி, அவன் பெண்சாதியைக் கண்டு: ஓ பெண்மணியே! நீ கொடுத்த பழங்கள் வெகு நன்றாயிருக்கின்றன; ஆதலால் உன் செடியிலிருக்கிற எல்லாப் பழங்களையும் நானே வாங்கிக்கொள்ள விரும்புகிறேனென்று சொல்லி, தான் கொண்டுபோன பணத்தை அவள் கையிற் கொடுத்துவிட்டு அங்கிருந்த பழங்களையெல்லாம் வாங்கி வீடுகொண்டு சேர்த்தான்.

அந்தத் திருட்டுக் கோமுட்டி தான் இவ்வாறு தேடிய பொருளை மற்றெவருக்கும் அறிவிக்கவில்லை. அந்த எளிய பார்ப்பானும் அவன் பெண்டுபிள்ளைகளும் சிறிதும் ஆலோசனையற்றவர்களாய்த் தங்கள் பழங்களில் ஒன்றையும் அரிந்துபாராமல் சிறிது பொருளுக்கு அளவற்ற மாணிக்கங்களை விற்றுப்போட்டார்கள்.

மறுநாட்காலையில் எழுந்துபார்க்கையில் முதனாள்போலவே அம் மரத்தில் அபரிமிதமாய்ப் பழங்கள் பழுத்து நிறைந்திருந்தன. அது கண்டு அந்தக் கொடிய கோமுட்டி, அதை யாராவது வாங்கிப்போய் அதன் பெருமையை அறியப்போகிறார்களேயென்று பயந்து, மறுபடியும் ஓடிவந்து அந்தப் பழங்களையும் வாங்கிக்கொண்டு போயினான். இப்படியே வெகுநாள்வரையில் நடந்துவந்தது. 'ஆசைக்கு அளவில்லை' என்று பெரியோர்சொல்வது பொய்யாகுமா? இவ்வாறு இந்தப் பார்ப்பானிடத்தினின்றும் பழம்வாங்கி வஞ்சகன் வீடுமுழுதும் நவரத்தினங்களைக் குவித்துவிட்டான். இப்படியே கொஞ்சகாலஞ்கழிந்தன. அப்படியிருக்கையில் அந்தச் செடி பட்டுப்போகிறகாலம் வந்துவிட்டது. அப்போது ஒருநாள்

கோமுட்டி வழக்கப்படி பழம்வாங்கவந்தான்; அன்றையதினம் ஒரு பழமும் பழுக்காமலிருக்கவே, அவன் மிகவும் விசனமாய் முகம்வாடி வீடுபோய்ச் சேர்ந்தான்.

அந்தச் செடி பழுக்க ஆரம்பித்த நாள்முதல் அன்றன்றைக்கும் பழுக்கும் பழங்களை விற்றுச் சம்பாதித்த பணம் அவர்களுக்கு அன்றுடஞ் சீவனத்திற்குத்தான் போந்ததும் போதாததுமாயிருந்தது. அன்றையதினம் பழங்கள் பழுக்காமற்போகவே, அவர்கள் அரிசி வாங்கப் பணமில்லாமல் முன்போலவே துக்கிக்கத் தொடங்கினார்கள். அச்சமயத்தில் அதிக சமர்த்தியான அந்தப் பிராமணனுடைய கடைசிப்பெண் பசிபொறுக்கமாட்டாமல், நமது புழக்கடைச் செடியில் வாடிவதங்கின பழமாவது இரண்டொன்று அகப்படாதா பார்ப்போமென்று போய்ச் செடிமுழுதும் ஆராய்ந்துபார்த்தாள். ஒருவர்கண்ணுக்குந் தெரியாமல் இரண்டுமூன்று பழங்கள் இலைமறைவாய்க் கிடந்தன. அவைகளைத் தேடிப் பறித்துக்கொண்டு ஓடிவந்து ஆவலோடு அரிகையில், அதனுள் நவரத்தினங்கள் நிறைந்திருப்பதுகண்டு, ஆச்சரியத்தால் ஒன்றுந்தோன்றுமல் கோவென்று கூவினாள். அதைக்கேட்டு அவள் தாய்தந்தையர்களும் சகோதரிகளும் என்ன என்னவென்று பயந்து ஓடிவந்தார்கள். அவர்களைப் பார்த்து அந்தப் பெண்: இதோ இந்த அற்புதத்தைக் கண்டீர்களா! ஒவ்வொரு பழத்திலும் உயர்ந்த ரத்தினங்கள் அளவற்றுக் கிடக்கின்றன! நாம் விற்றுப்போட்ட பழங்களில் இன்னுஞ் சிறந்த மணிகள் அபரிமிதமாயிருந்திருக்குமென்பதற்குச் சந்தேகமேயில்லை. இதனுலேதான் அந்தக் கோமுட்டி நமது பழங்களை வேறொருவரும் வாங்கவொட்டாமல் தான் ஒருவனே அதிக ஆவல்கொண்டு வாங்கிப் போனதுபோலத் தோற்றுகின்றது என்றுள்.

அதைப்பார்த்து யாவரும் சந்தோஷத்தால் மதிமயங்கிப்போனார்கள். அந்தப் பிராமணன்: ஐயோ! நமது மருமகன் செய்த உதவியின் பெருமையை அறியாமல் நாம் மோசம்போனோமே! இதென்ன துர்ப்பாக்கியம் பார்த்தீர்களா! தானுகவந்த ஸ்ரீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளினதுபோலாயிற்றே! நல்லது; நான் இதோ போய் நமது பழங்களையெல்லாம் திருப்பிக் கொடுத்துவிடும்படி அந்தக் கோமுட்டியை நிர்ப்பந்தப்படுத்துகிறேனென்று சொல்லி உடனே கோமுட்டி வீட்டுக்குப்போய் அவனைக் கண்டு, நீ என் வீட்டிலிருந்து வாங்கிவந்த பழங்களைக் கொடுவென்

ருன். அதைக்கேட்டுக் கோமுட்டி ஒன்றுமறியாதவன்போல ஏது பழமென்று சொல்ல, அவன்: அடா! வஞ்சகனென்கிறபேர் உனக்குத்தான் தகும்; என் பெண்சாதி விலைதெரியாமல் விற்றுவிட்ட நவரத்தினங்கள் நிறைந்திருந்த பழங்களைத் திருட்டுத்தனமாய் வாங்கிக்கொண்டுவந்துவிட்டாய் அல்லவா! அது உனக்கு நியாயமன்று. சில பழங்களையாவது கொடுத்துவிடு என்று கேட்க வஞ்சகன்: நீ என்ன, உன்னுடம்பு தெரியாமற்பேசுகிறாய்; நான் சாதாரணமான பழங்கள்தாம் வாங்கிவந்தேன்; அவையெல்லாம் அப்போதே வயிற்றிற்போய்ச் சேர்ந்தன; இனி இப்படிப்பட்ட திருட்டுப்பேச்சு பேசாதே; உனக்கு வேலை வேறொன்றுமில்லையோ என்றுசொல்லி, வீடுநிரம்ப நவரத்தினங்களை வைத்துக்கொண்டே, ஒன்றுமில்லையென்று அவனைத் தெருவிலே தள்ளிக் கதவைச்சாத்திவிட்டான்.

வஞ்சகன் தன் பொருள்களைக் கொடுக்கமாட்டேனென்று சொல்லி அடித்துத் துரத்திவிடவே, பிராமணன் மிகவும் விசனமடைந்து வீட்டுக்குத் திரும்பிவந்து, அன்று பொழுதைக்கடப் போக்க வேறுவழியில்லாமையால், தன் மகள் கையில் அகப்பட்ட மணிகளையாவது விற்றுக்கொண்டு வரலாமென்று அவைகளை வாங்கிக்கொண்டு ஒரு தட்டான்கடைக்குப் போனான். அவனைக்கண்டு இந்தக் கற்கள் உனக்குத் தேவையாவென்று கேட்டதற்கு, அந்தத் தட்டான்: அவன் கையிலிருந்த சிலாக்கியமான கற்களைப்பார்த்து, நமக்கு நல்லதருணம் வாய்த்ததென்று மிகவும் சந்தோஷமடைந்து, ஏழையான உனக்கு இவைகள் கிடைத்தவிதம் எப்படி? இவையெல்லாம் திருட்டுக்கற்களல்லவா? நீ பெருந்திருடன்; உள்ளறிந்த கள்ளன்; இக்கற்களை நான் வெகுநாளாய்க் காணாமல் தேடிக்கொண்டிருக்கிறேனே; என் கடையிலேயே திருடி என்னண்டையே விற்கவந்தாயல்லவா? என்று இரைச்சலிட்டான்.

அதைக்கேட்டு அந்தப் பேதைப் பார்ப்பான்: ஐயோ! அதல்லவே! அதல்லவே! சத்தியமாய்ச் சொல்லுகிறேன்; இவையெல்லாம் என் மருமகன் கொடுத்தவைகளாயிற்றே என்று கதறினான். அவனை எவ்விதமாயாவது வெருட்டவேண்டுமென்று தட்டான்: ஓகோ, திருடன் திருடன் என்று கூவினான். அந்த மணிகள் தனக்குக் கிடைத்தவிதம் இவ்வாறென்று பார்ப்பான் எத்தனைதாம் பிரமாணம்பண்ணிச் சொல்லியும் தட்டான் அதை நம்பமாட்டேன்

என்றான். அந்த ரத்தினங்களைத் தான் எப்படியாவது பிடுங்கிக் கொள்ளவேண்டுமென்று தீர்மானித்ததனால் அந்தக் கொல்லன், பார்ப்பான் கையை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு அவனை அடித்து வெருட்டி: வேண்டாம்; நன்மையாய்ச் சொல்லுகிறேன்; நீ திருடின கற்களைக் கொடுத்துவிடு என்று தான் வெகு சத்தியஸந்தன்போலப் பலவிதமாய்க் கேட்டான். எவ்வளவுநேரம் வேண்டியும் அவன் இது நான் திருடினதல்ல; நான் இதைக் கொடுக்கமாட்டேனென்று ஒரேபிடியாய்ப் பிடிக்கவே, தட்டான்: ஓகோ, கள்ளன் கள்ளன் என்று பெருங்கூச்சலிட்டான். ஜனங்கள் அபரிமிதமாய்க் கூட்டங்கூடிப்போயின; போலீசுசேவகர்களும் வந்து நிறைந்தார்கள். அத்தருணத்தில் கொல்லன் பேரிரைச்சலாய்: நீ திருடின மணிகளை இப்போதே கொடுத்துவிடுவாயானால் தப்பித்துக்கொள்ளலாம்; இல்லாவிட்டால் போலீசுசேவர்கள்வசம் ஒப்புவிப்பேன்; அவர்கள் சிறையிலடைத்து வருத்துவார்களென்றான். பிராமணன் தனக்கு அந்த மணி கிடைத்தவழியை எத்தனைதரம் சொல்லியும் அதைக் கேட்பாரொருவருமில்லை; கேட்டாலும் நம்புவாரில்லை. ஏழைவார்த்தை அம்பலமேறுமா? தான் எவ்வளவு முறையிட்டும் தன் பேச்சு பயன்படாமற்போகவே, அந்த எளிய மனிதன், இதென்ன, இப்படி நம்மைப் போனவிடமெல்லாம் பேய் பிடித்தாட்டுகிறதே; இதென்ன விபரீதகாலம்! கைக்கெட்டினது வாய்க்கு எட்டவில்லையே என்று விசனமடைந்தான். ஆயினும், பொருளுக்கு ஆசைகொண்டு பிராணனை விடலாமா? பொருள்போனாற்போகிறது; நாம் கொடுத்துவைத்தது இவ்வளவுதான்; இந்த ஆபத்துவேளையில் போலீசார்கையில் அகப்படாமல் தப்பித்துக் கொள்வதே மேலானதென்று எண்ணி, தன் மணிகளைத் தட்டான் கையிற் கொடுத்துவிட்டுப்போகத் தீர்மானித்தான். கொல்லனும் அவன் கையிலிருந்த மணிகளைப் பிடுங்கிக்கொண்டு தான் வெகு யோக்கியன்போல அவனை ஒன்றுஞ்செய்யாமல் அதட்டித் துரத்திவிட்டான். இந்தக் கள்ளனை ஒன்றுஞ்செய்யாமல் துரத்திவிட்ட கொல்லன் மிகவும் ஈவுஇரக்கம் பூததயை முதலிய நற்குணங்கள் உள்ளவனென்று அவனையே யாவரும் கொண்டாடினார்கள். அந்தப் பேதைப்பிராமணனும் தன் பொருளைத் தட்டான்கையிற் பறிகொடுத்து ஒன்றுந்தோன்றாமல் வந்தவழியே வீடுபோய்ச்சேர்ந்தான்.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்."

(இன்னும் வரும்.)

## ஆபரணமிழத்தல்

ஒரு அரசன் ஒருநாள் தன் உத்தியானவனத்தில் உல்லாஸமாய் உலாத்தி அதன் அழகைக் கண்குளிரச் சுற்றிப்பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கழுத்தில் முத்தாஹாரமொன்றிருந்தது. நல்ல இருண்டராத்திரியிலும் கோடிசூரியன் உதித்தாற்போல் மிகப் பளபளப்பாய்ப் பிரகாசிக்கின்ற சிறந்த விலையில்லா மாணிக்கமொன்று அந்த முத்துஸரத்தில் நடுநாயகமாய் அமைக்கப்பட்டிருந்தது. ராஜா உலாவிக்கொண்டிருக்கையில் அந்த மாளிகையின் முன்புறத்தில் தோட்டக்காரர்கள் பாத்திகட்டித் தண்ணீரிறைத்துப் பூஞ்செடி நட்டுக்கொண்டிருந்தார்கள். அரசன் உலாத்திக் கொண்டே அவ்விடத்திற்குப்போய் அவர்கள் பூஞ்செடி நடுவதைக் கண்டு தானும் அவற்றுள் செழிப்பான சில சிறந்த செடிகளை வாங்கி விநோதமாய் நடப்புகுந்தான். அப்படி நட்டுக்கொண்டிருக்கையில் முத்தாஹாரத்து நாயகமணி கட்டடந்தளர்ந்து ஆடிப்போய்க் கீழே வீழ்ந்தது; அவன் அதைப் பாராமல் செடியோடுகூட மண்ணில் புதைத்துவிட்டான். இரண்டொரு நிமிஷங்கழித்து அவன், தன்னைச் சூழ்ந்துகொண்டிருந்த மணியொளி அடங்கியிருப்பது கண்டு, இதென்னவென்று சற்று நிதானித்துப்பார்த்தான். மார்பிலிருந்த முத்தாஹாரத்தில் நடுநாயகம் உதிர்ந்துபோயிருந்தது. அதைக்கண்டு அவன் திடுக்கிட்டு அவ்விடத்தைவிட்டு எழுந்திராமலே அந்தப் பாத்தியின் மேற்புறம்முழுதும் முதலில்தானே ஒரு தடவை நன்றாய் ஆராய்ந்து தேடிப்பார்த்தான். எவ்வளவுநேரந் தேடியும் அவன் கையில் அது அகப்படவில்லை. ஆயினும் அங்கே தான் உட்காந்திருந்தவிடத்தில் எங்கேயாவது அது வீழ்ந்திருக்க வேண்டுமென்று அரசன் தன் வேலைக்காரர்களைவிட்டு அவ்விடத்தைக் கீழும்மேலும் செம்மையாய்க் கிளரி வெகு நுட்பமாய்ப் பரிசோதனைசெய்துபார்க்கும்படி கட்டளையிட்டான். பலதடவை வெகு கவனமாய்த் தேடிப்பார்த்தும் அகப்படவில்லை. சிலநாள் வரையில் விடாமலே அதைத் தேடிப்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்படியேயிருக்க, நாளாவர்த்தியில் அதைத் தேடுகிற வழக்கம் நின்றுபோய், வரவர அப்படி ஒரு சிறந்த மாணிக்கம் இருந்தது போய்விட்டது என்கிற செய்தியும் தெரியாமல் மறந்துபோயிற்று.

இப்படி வெகுநாள் சென்றன. அந்தத் தோட்டத்தில் எத்தனையோ வேறுபாடெல்லாம் உண்டாயின. ஆயினும் அந்த மாணிக்கம்மாத்திரம் அகப்படவேயில்லை. இப்படியிருக்க, ஒருநாள் அரசன் அந்தப் பூங்காவனத்தில் வேடிக்கையாய்ச் சுற்றிச் சுற்றித் திரிந்துகொண்டிருக்கும்போது பலதடவையிலும் ஒரு பளபளப்பு

அவன் கண்ணுக்குத் தோன்றிக்கொண்டேயிருந்தது. ஆயினும் அவன் என்னவென்று அதைக் கவனியாமலே தான் போகிறவழியில்.போய்க்கொண்டேயிருந்தான். அவன் முத்தாஹாரத்திலிருந்த மாணிக்கம் கைசோர்ந்துபோய் எத்தனையோ ஆண்டுகள் ஆயினவே; பற்பல சிறந்த ராஜகாரியங்களில் விசேஷமாய்க் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருக்கிற ராஜனுக்கு இந்த அற்பவிஷயம் நெடுநாள் நினைவிருக்குமா? முன் அவன் செடி நடும்போது அந்த ரத்தினம் கீழேவிழுந்து சேற்றில் நன்றாய் அழுந்திப்போயிற்று. பலதடவைகளில் மண்ணைக் கிளறும்போது அது மேலே வந்திருந்தாலும், அதன்மேல் மண்படிந்து ஒளி மழுங்கிக்கிடந்ததனால் இவ்வளவு காலமும் ஒருவர் கண்ணிலும் அகப்படாமலேயிருந்தது. இப்போது முதனாள் இரவெல்லாம் நன்றாய் மண்ணுருக மழைபெய்யவே அந்தக் கல்லின்மேல் பற்றியிருந்த மண்ணெல்லாம் கரைந்தோடிப் போய்ப் பளபளவென்று மாணிக்கம் மேலே பிரகாசிக்கலாயிற்று. அரசன் அதை இன்னதென்று அறியாமல், பலதடவை உபேக்ஷையாய்ப் போனபோதிலும், அடுத்தடுத்து அநேகந்தடவை கண் கூசும்படியான காந்திதோன்றவே, அதென்னவோ கண்டறியவேண்டுமென்று ஆவலுண்டாகி அது தெரிந்தவிடத்திற்போய்க் குனிந்தான். அது ஒரு உயர்ந்த ரத்தினமாயிருந்தது; உடனே அதைக் கையிலெடுத்துக் கொஞ்சநேரம் நிதானித்துப்பார்த்து, அதனழகைக் கண்டு ஒன்றுந்தோன்றாமல் மனம்பூரித்துநின்றான். அப்போதுகூட அவனுக்கு அது முன் ஒருகால் தான் தரித்திருந்த மாணிக்கமென்று நினைவுண்டாகவில்லை. பின்பு அந்த ரத்தினத்தைப் பலவிதத்திலும் பரிக்ஷைசெய்து பார்க்குமளவில் அதினுடைய நற்குணங்களால் அவனுக்குப் பழைய நினைவு உண்டாயிற்று. அவனுக்குப் பழைய நினைவு வந்ததற்குக் காரணம் இது ஒன்றுமாத்திரமோ? முன் அந்த மாணிக்கமிழைத்திருந்தவிடத்தில் அதை வைத்துப்பார்க்கும்போது அவ்விடத்திற்கு அதுவே மிகவும் ஏற்றதாயிருந்தது. இது கைசோர்ந்திருந்தகாலத்தில் இதற்குப் பதிலாய் அந்த முத்தாஹாரத்தில் அமைத்த மற்றொரு மாணிக்கம் இதற்குச் சிறிதும் ஈடாயிருக்கவில்லை. அதனால் அதைப் பெயர்த்துவிட்டு இதையே மறுபடியும் அந்த ஹாரத்தில் கட்டித்தரித்துக்கொண்டு, நமது பெரியோர் நீதிமுறைதவறாது குடிகளைக்காத்து, அவர்களிடத்தினின்றும் கிரமமாய் ஆறில் ஒருபங்கு பகுதிப்பணம் பெற்று, துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ்செய்து நியாயமாய்த் தேடிய பொருளல்லவா இது! முகத்துநீர் மூக்கில்வடியச் சம்பாதித்த சொத்து ஒருபோதும் போகாதென்று பெரியோர்சொல்வது பொய்யாகுமாவென்று தானேநினைத்து மகிழ்ந்துகொண்டு வெகுகாலம் சுகமாக வாழ்ந்திருந்தான்.

# சிறுவர்க்கானகதை.

சிங்கமும் சுந்தரமும் (தொடர்ச்சி).

தனிகனாயிருந்த ஒரு வர்த்தகன், ஏதோஒரு காரணத்தால் தரித்திரனாகிப் பட்டணத்தைவிட்டு ஒரு குப்பத்திற்போய் எளியவேலை செய்து ஜீவனஞ்செய்துகொண்டிருக்கையில், திசைதப்பிப் போய்விட்டதென்று நிராசைசெய்திருந்த, பெரிய சாமான்கப்பல்களில் ஒன்று கரைவந்து சேர்ந்ததாகச் செய்தி கேள்விப்பட்டுச் சந்தோஷமாய்க் கடற்கரைக்குப்போய், அந்தச் சாமான்களின்மேல் அன்னியர் தாவாசெய்ததனால் போனபடியே திரும்பிவருகையில், வழிதப்பிக் காற்றுமழையில் அடிபட்டு, வெகுதூரத்தில்தெரிந்த ராஜமாளிகைபோன்ற நிர்மானுஷியமான ஓரிடத்தில் இராத்தங்கியிருந்து, மறுநாள்காலையில் அம்மாளிகைவாயிலிலிருந்த தோட்டத்தில் ரோஜாப்பூக்கள் அபரிமிதமாய்ப் பூத்திருக்கக்கண்டு, சுந்தரமென்கிற தன் சிறியமகள் விரும்பி வேண்டினதை நினைத்துக்கொண்டு, அவற்றுள் சில்வற்றைக் கொய்து கையிலெடுத்துக்கொண்டு தன் ஊருக்குப்போகப் புறப்பட்டானென்று சென்ற சஞ்சிகைகளிற் படித்திருக்கிறோமே.

அந்த வர்த்தகன் அந்த மாளிகையைவிட்டுப் புறப்படும்போது அதிபயங்கரமான கர்ச்சனையொன்று உண்டாயிற்று. அதைக்கேட்டு அந்த வர்த்தகன் இதென்னவென்று, கோடையிடியைக் கேட்ட பாம்புபோல் நடுங்கி, திகிலடைந்தான். உடனே கண்களில் நெருப்புப்பொறி பறக்க அதிக உக்கிரமாய்ப் பார்த்துக்கொண்டு சிங்கமொன்று எதிரேவந்துநின்று ஓ கனவானே! காட்டு மிருகங்கள் குடிகொண்டிருக்கும் இந்தக் காட்டில் கதியற்று அல்லாடித்தவித்த உன்னை நான் ஐயோபாபம் என்று என் அரண்மனைக்குவரச் சம்மதித்துச் சகலோபசாரமுஞ்செய்து பாதுகாத்ததற்கு, நான் என் பிராணனைவிடப் பெரிதாய்ப் பரிபாலித்துவந்த மலர்களைத் திருடிக்கொண்டுபோவது, நீ செய்கிற பிரதியுபகாரமோ? இந்தத் தப்பிதத்திற்காக நீ இன்னும் அரைநாழிகைக்குள் உயிரைவிட்டுவிடவேண்டுமென்று வெருட்டிக் கூவிற்று.

அதைக் கேட்டு வர்த்தகன் பயந்து அதின் காலில்வீழ்ந்து ஓ மகாப்பிரபுவே! என் அருமைமகளுக்காக ஒரு பூவைப் பறிப்பது தங்களுக்கு இவ்வளவு கோபமுண்டாக்குமென்று எனக்குத் தெரியாது. என்னைக் கொல்லாமல் மன்னிக்கவேண்டுமென்று வேண்ட, சிங்கம்: நான் பிரபுவன்று; ஒரு மிருகம். பொய்பேசுகிறவர்களைக் கண்டால் எனக்குச் சிறிதும் ஆகாது. நீ இப்போது எனக்கு இச்சகமாய்ப் பொய்பேசித் தப்பித்துக்கொண்டுபோகலாமென்று நினை

யாதே, உனக்குப் பெண்களுண்டென்று சொல்லுகிறாய்; அது உண்மையாயிருந்து உனக்குப் பதிலாய் அவர்களுள் ஒருத்தியை என்னிடத்திற்கு அனுப்புவதானால் இப்போது உன்னை மன்னித்து விடுகிறேன். அப்படிச் செய்யச் சம்மதமில்லையாயின், மூன்று மாதத்திற்குள்ளாக நீயேயாவது திரும்பி என்னிடத்திற்கு வருவதாய் உறுதிமொழிசொல்லிப்போவென்று சொல்லிற்று.

தன் மகளைச் சிங்கத்துக்கு இரையாய் அனுப்பிவிட அவனுக்குச் சிறிதும் விருப்பமில்லை. ஆயினும் அவர்களை இன்னுமொருதடவை கண்ணாரக்கண்டு மறுபடியும் வந்து மடிந்துபோகலாமென்று நிச்சயித்து, அவன்: அப்படியே நான் மூன்றுமாதத்துள் திரும்பிவருகிறேனென்று பிரமாணஞ்செய்து தன் ஊருக்குப்போகப் புறப்பட்டான். அத்தருணத்தில் சிங்கம் அவனிடத்தில் இரக்கமுற்று: நீ வெறுங்கையோடு வீட்டுக்குப்போவது எனக்குத் தகுதியாய்த் தோன்றவில்லை. நீ சென்றராத்திரி படுத்து நித்திரைசெய்தவிடத்தில் ஒரு பெட்டியிருக்கிறது. அது நிரம்ப உனக்குச் சம்மதமானபொருளை வாரிக்கொண்டு போய்வாவென்று சொல்லவே அவன் வெகு சந்தோஷமாய் அப்பெட்டி நிரம்பப் பொருளை வாரிக்கொண்டு குதிரைமேலேறிச் சந்தோஷமொருபக்கத்திலிருக்க, யாராவது ஒருவர் வந்து சிங்கத்திற்கிரையாகவேண்டுமே என்று, அதிக துக்கமுடைந்து தன் ஊர்போய்ச் சேர்ந்தான். அவனைக்கண்டதும் அவன் மக்களெல்லாரும் வெகு சந்தோஷமாய் ஓடிவந்தார்கள். அவர்களைக் கண்டவுடன் அவன் கட்டிக்கொண்டு உச்சிமோப்பதைவிட்டுக் கண்ணும் கண்ணீருமாய்ப் புலம்பிக்கொண்டு தான் கொண்டுவந்த பூக்களைச் சுந்தரத்தின்கையிற்கொடுத்து, இதற்காக நான் எவ்வளவு வருத்தப்பட்டேனே உங்களுக்குத் தெரியுமாவென்று, தான் அந்த அரண்மனையிற்கண்டதும் கேட்டதுமான சகல சமாசாரங்களையுஞ் சொன்னான்.

அதைக்கேட்டுப் பெரிய பெண்களிருவரும் கண்ணீர்விட்டு, இவ்வளவு சங்கடநேர்ந்ததும் இந்தப் பொல்லாச் சிறுக்கியாலல்லவா? நாங்கள் கேட்டிருந்ததுபோலவே இவளும் உயர்ந்தபொருள்களையே கேட்டிருப்பாளானால் நமது தந்தைக்கு இப்படிப்பட்ட ஆபத்தெல்லாம் சம்பவிக்குமா? இவள் செய்கையெல்லாம் ஒருவகையானது; இவ்வளவுதூரம் அபாயங்களை உண்டாக்கியும் சிறிதும் கண்ணீர்விடாமலிருக்கிறாளே, இவள் மனவுறுதியை என்னவென்று சொல்லுகிறது என்று இப்படிப் பலவிதமாய் அவள்மேல் குற்றஞ்சார்த்தினார்கள்.

அதற்குச் சுந்தரம் நானேன் கண்ணீர்விடவேண்டும்; இவருடைய பெண்களில் யாராவது ஒருவரையே சிங்கம் மேலாகக் கோரினதால், நமது தகப்பனார்க்குப்பதிலாய் அதினிடத்திற்கு

நானேபோகச் சித்தமாயிருக்கிறேனே என்றாள். அதைக்கேட்டு அவள் சகோதரர்கள்: குழந்தாய் நீ அப்படி ஒருபோதுஞ் செய்யக் கூடாது; உன்னைவிட்டு நாங்களிரோம்; அதுவே சாகிறதோ நாங் களே சாகிறோமோ; போய் ஒருகை பார்த்துவருவதேகாரியமென்று சொல்ல, தகப்பன்: நீங்கள் அந்த எண்ணம் ஒருகாலுங் கொள்ள வேண்டாம்; அதைக்கொல்ல யமனாலுமாளாது. சிறுவயதான நீங் கள் இன்னும் நெடுநாள் வாழ்ந்திருக்கவேண்டும். நீங்கள் ஒரு வரும் உயிர்மாய்க்கக்கூடாது. வயதுசென்ற கிழவனாகையால் நானேபோகச் சித்தமாயிருக்கிறேன் என்று சொன்னான். சுந்தரம் எவ்வளவுசொல்லியுங் கேளாமல், நீங்கள் போம்போது நான் பின்தொடர்ந்து வருவேனானால் அதைத் தடுக்க உங்களாலாகு மோ? எனக்குப் பிராணனிடத்தில் ஆசையில்லை; நீங்களிறந்த துக்கத்தால் உயிரைவிடுவதைப் பார்க்கச் சிங்கத்துக்கு இரையாய்ப் போவதே மேலானது என்று சொல்லி, தான் போவதிலேயே நோக்கமாயிருந்தாள். அது அவளிடத்திற் பொறாமைகொண்ட சகோதரிகளிருவர்க்கும் வெகு சந்தோஷமாயிருந்தது.

தன் மகள் உயிரைவிடத் துணிந்திருப்பதைப்பற்றி உண்டான விசனத்தினால் தான் சிங்கமாளிகையினின்றுங் கொண்டுவந்த பொற் பெட்டி வர்த்தகனுக்குக் கவனமில்லாமற்போயிற்று. ஒருநாள் படுக்கப்போம்போது பக்கத்தில் அந்தப் பெட்டி வைத்திருப்பதைக் கண்டு ஓகோ! இதை மறந்துபோனேமேயென்று சுந்தரத்தை மாத்திரம் ஏகாந்தமாயழைத்து அதை அவள்கையிற் கொடுக்கப் போனான். அவள் இது எனக்கேன்? இதைக்கொண்டு என் சகோ தரிகளுக்குச் சிறந்த ஆடையாபரணங்கள் வாங்கிக் கொடுங்க ளென்றாள்.

சாந்தனையுந் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையுங் காப்ப ரறிவுடையோர் — மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.

இப்படியிருக்கையில் சிங்கம் கெடுவிட்ட மூன்றுமாதமும் மூன்று விநாடியாய்க் கழிந்துபோயின. வர்த்தகனும் அவன் சிறியமகளான சுந்தரமும் சிங்கமாளிகைக்குப் பயணப்பட்டுப் போகச் சித்தமாயிருந்தார்கள். அத்தருணத்தில் மூத்தபெண்களிரு வரும் தாங்கள் மிகவும் விசனமடைந்திருப்பதாய்த் தெரிவிக்க வேண்டுமென்று கண்களில் வெங்காயத்தைத் தேய்த்துக்கொண்டு கண்ணீர்விட்டார்கள். சுந்தரமோ மனதில் யாதொன்றும் கலக்க மில்லாமல் சந்தோஷமாகவே புறப்பட்டுப்போனாள்.

(இன்னும் வரும்.)

## சமாசாரம்

**கவர்னர் ஜெனாலவர்களின் நல்வரவு.**—இப்போது இத்தேசத்தில் க்ஷாமத்தினுலுண்டாயிருக்கும் கொடுமைகளைத் தணிக்கவேண்டியவழிகளைத் தெரிந்தறிவிக்கும்படி இச்சென்னைநகர்க்கு நமது கவர்னர் ஜெனரலவர்கள் விஜயஞ்செய்து காட்சியளித்த வரலாற்றை முதலிலெயே தெரிவித்திருக்கிறோம். நமது கவர்னர் ஜெனரலாகிய லார்ட் லிட்டன் பிரபு இப்பட்டணத்திற்கு வந்து க்ஷாமோபத்திரவநிவிர்த்திக்குவேண்டிய பல புதிய ஏற்பாடுகள் செய்து, இன்னும் இத்தேசத்தில் பஞ்சத்தால் வருந்துகிற மற்ற நாடுகளையும் பார்த்து வரப்போயிருக்கிறார். பெங்களூர், கோயம்பத்தூர், நீலகிரி முதலியவிடங்களுக்குப்போய் மறுபடியும் மைசூர்மார்க்கமாய் வந்து மகாராஜா ராணிமார்களைப்பார்த்துப் பேசிப்போவதாகக் கேள்வி. சிற்பசாஸ்திராதிகாரியும் மிக்க மேதாவியுமான மேஜர் ஜெனரல் கெனடி துரையவர்களின் திர்க்காலோசனையினால் பம்பாய் ராஜதானியில் பஞ்சத்தின் பொல்லாங்குகள் படிப்படியாய்த் தணிந்துவருகிறதென்று தெரிந்து இந்தப் பிரபு, இச்சென்னைக் கவர்னரும் அவருடைய ஆலோசனையையே முதன்மையாகக்கொண்டு இந்த க்ஷாமத்தின் தீமைகளைத் தணிக்கவேண்டியவழிகளைத் தேடினால், இவ்விடத்துப் பிரஜைகளின் பரிதாபமும் அநேகமாய்த் தீருமென்று உத்தேசித்து, அப்படியே அந்தக் கெனடிதுரையை, டியூக் அவ் பக்கிங்ஹம் பிரபு அவர்களுக்குச் சமயோசிதமாய் யுக்தி ஆலோசனைகள் சொல்லும்படி இவ்விடத்திற்கு அனுப்புவதாகத் தெரியவருகிறது. மேலும் பம்பாய் ராஜதானியிலும் நிஜாம் ராஜ்யத்திலும் இன்னும் மற்ற அவசியமானவிடங்களிலும் நூதனமாய் இருப்புப்பாதை ஏற்படுத்துவதுமுதலிய பெரிய வேலைகளைக் கற்பித்துச் சென்னைராஜ்யத்துப் பேதைகளுக்குப் பலவகையிலும் பிழைப்புண்டாக்கக் கருதியிருக்கிறார்.

**இத்தேசத்துப் பஞ்சம்.**—நாம் சென்றமாதத்திற்சொல்லியபடியே அநாதப்பேதைகளுக்கு வாரப்பணங் கொடுத்துவருகிறார்கள். இத்தேசம் க்ஷாமத்தால் வருந்தித் தவிக்கிறசெய்தி இங்கிலாந்துமுழுதும் பரவியிருக்கின்றது. அத்தேசத்துப் பிரபுக்களும் கூடியவளவு உதவிசெய்ய எத்தனித்திருக்கிறார்கள். நாளதுமீ 14௳ நமது மகாராணியார் பார்லிமெண்டு சபையில் இவ்விஷயத்தைப்பற்றி எடுத்துப் பேசினார். லார்ட் மேயர் பிரபு மறுநாள் மான்ஷன் மாளிகையில் சபைகூடினவுடனே முதலில் இத்தேசத்துப் பஞ்சத்தைப்பற்றி பிரஸ்தாவஞ்செய்தார். அதாவது: ஓ கனவான்களே! தாங்கள் சற்றுநேரம் இந்துதேசத்துப் பிரஜைகள் பஞ்சத்தால் வருந்திப் பரிதவிப்பதைப்பற்றிக் கவனிக்கக் கோருகிறேன். நேற்று பார்லிமெண்டு சபையில் மகாராணியார் எடுத்துப் பிரசங்கித்ததனுலேயே அதன் வர

லாறு நமக்கு நன்றாய்த் தெரியலாம். மேலும் அத்தேசத்து க்ஷாமோபத்திரவநிவர்த்திசங்கத்தாரிடத்தினின்றும் ஒரு மின்தபாலும் வந்திருக்கின்றது. அதாவது: பிரபுக்களே! எங்கள் தேசத்தில் நெடுநாளாய் அநாவிருஷ்டியால் மகாக்ஷாமம் ஸம்பவித்து நாம் மனதினாலும் நினைக்கக்கூடாத தீமைகள் விளைந்துகொண்டிருக்கின்றன. அநாதப்பரதேசிகள் வயிற்றுக்கில்லாமல் கூட்டங்கூட்டமாய் மடிகிறார்கள். ஆடுமாடுகள் இறப்பதற்களவில்லை. தனவான்களான பிரபுக்கள் இந்த அநாதக்குடிகளிடத்தில் மனமிரங்கி வேண்டுமளவு பொருளுதவி செய்தாலல்லது இந்த விபத்து நீங்காது. இந்தத் துன்பந்தணியக் கூடுமளவு உபகரிக்கும்படி தங்கள் கனத்தை வணங்கி வேண்டுகிறோமென்று எழுதியிருக்கிறார்கள். ஆதலால் அவர்களுடைய வேண்டுகோளை உபேக்ஷைசெய்வது தகுதியன்று. அவரவர்களுக்கு இயன்றமட்டும் நாம் இந்தத் துன்பம் தணியும்படி உதவுவது அவசியம். ஆகையால் கையொப்பங்கள் வெகு சீக்கிரத்தில் அனுப்பப்படுமென்று எதிர்பார்க்கிறேன் என்று எடுத்துரைத்தார். அப்படியே இதுவரையில் 15,00,000 ரூபாய் சேகரித்து அனுப்பியிருக்கிறார்கள். ஆதலால் சீக்கிரத்திலேயே இன்னும் விசேஷமாயப் பொருளுதவி கிடைத்துப் பேதைஜனங்களுக்குப் போஷணம்நடக்குமென்று நம்புகிறோம்.

இப்போது சிலநாளாய் இச்சென்னைராஜதானியில் பற்பலவிடங்களில் ஒருவாறு மழைபெய்து ஜலத்தைக் கண்ணாற்காணும்படியிருக்கின்றது. இந்த மழை இப்படியே தக்ககாலங்களில் பெய்துவந்தால்தான் வருகிறவருஷத்திலாவது க்ஷேமமுண்டாகும். கார்த்திகைக்குள் ஏரிகுளங்கள் நிறையும்படியான நல்லமழை பெய்யாவிடின் வருகிறவருஷமும் க்ஷாமவருஷமென்றே நிச்சயிக்கலாம்.

**ருஷியதுருக்கர் சண்டை.** — ருஷியதுருக்கர் சண்டையில் நெடுநாள்வரையில் ஜயாபஜயந்தெரியாமலிருந்தது. இப்போது சிறிதுகாலமாய் துருக்கர்பங்கு ஜயமும் ருஷியர்பங்கு அபஜயமுமாயிருக்கின்றது. பால்கன்மலைக்கு வடக்கிலும் தெற்கிலும் துருக்கர் ஜயமடைந்திருக்கிறார்கள். ருஷியர் பக்கலில் பிராணச்சேதம் வெகுவாய் நேரிடுகின்றது. ருஷியரும் துருக்கர்களைப் பற்பல இடங்களிலெதிர்க்கிறார்கள். ஆயினும் கடைசியில் தோற்றோடிப்போம்படி நேரிடுகின்றது. துருக்கிய சுல்தான், தன் சைனியத்தை விருத்திசெய்யவேண்டுமென்று நாலாமூலையிலும் யுத்தவீரர்களைச் சேர்க்கும்படி உத்தரவுசெய்திருக்கிறார். ருஷியர் தம்பாட்டிலிருந்த துருக்கரை வலுவில் சண்டைக்கழைத்தது, தூங்கினவனைத் தட்டியெழுப்பியது போலிருக்கின்றது. ஆயினும் முடிவு எப்படியாகுமோ தெரியாது. இதிப்படியிருக்க வருகிற வருஷாகாலத்தில் திடமாய்ச் சண்டை நடத்தும்படி இருதிறத்தாரும் வேண்டியமுயற்சி செய்துவருவதாகத் தெரியவருகின்றது.

Printed at the C. K. S. Press.